**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 124 / 2023** |
| **Deposition of witness for** | : | **PW : 10** |
| **Name** | : | **திருமதி. சின்னப்பொண்ணு** |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.08.2026**

எதிரிகள் 2,3 ஆஜர். எதிரி–1 இறப்பு.

**முதல் விசாரணை :**

நான் வேடசந்தூரில் குடியிருந்து வருகிறேன். பாத்திர வியாபாரம் செய்து வருகிறேன். எனது கணவரின் தம்பி மகன் பெயர் மாரிமுத்து. மாரிமுத்துவிற்கு மகாலெட்சுமி, தீபிகா என்ற இரண்டு மகள்கள் உள்ளனர். அதில் மகாலெட்சுமியை ஆஜர் எதிரிகள் மகன் ராஜாவிற்குத் திருமணம் செய்து கொடுத்தார்கள். திருமணத்தின் போது மகாலெட்சுமிக்கு 13 பவுன் நகை போட்டார்கள். இறந்து போன மகாலெட்சுமி, ஆஜர் எதிரிகள் ½ பவுன் நகை கேட்டதாகவும், 2,3 முறை அவர்களுக்குள் தகராறு நடந்ததாகவும் சொன்னார். இது சம்பந்தமாக நான் போய் சமாதானம் செய்து மகாலெட்சுமியை எதிரிகள் வீட்டில் விட்டுவிட்டு வந்தேன். எதிரி

பஞ்சவர்ணம் போன் செய்து, மகாலெட்சுமியை ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாகவும், இறந்துவிட்டதாகவும் சொன்னார். (சாட்சி எதிரிகள் தான் அடித்து கொன்றுவிட்டார்கள் என்று கூறுகிறார்). ஆஸ்பத்திரியில் போய் பார்த்தோம். மகாலெட்சுமி பிணமாகக் கிடந்தார். நானும், கணேசனும், மாரிமுத்துவும் போய் காவல்நிலையத்தில் புகார் சொன்னோம். யார் புகாரில் கையெழுத்து போட்டார்கள் என்று எனக்குத் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

மகாலெட்சுமி எவ்வாறு இறந்தது பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. போன் என் மகன் மாரிமுத்துவிற்கு வந்தது. என் மகன் சொன்ன பிறகுதான் மகாலெட்சுமி இறந்த விபரம் தெரியும். எதிரிகள் மகாலெட்சுமியிடம் ½ பவுன் நகை கேட்டதாக மகாலெட்சுமி என்னிடம் சொன்னதாக காவல்துறை விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. இறந்துபோன நபரின் உறவினர் என்பதால் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2026.08.29 16:08:50 +0530

அமர்வு நீதிபதி (மு.கூ.பொ),
மகளிர் நீதிமன்றம், மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 124 / 2023** |
| **Deposition of witness for** | : | **PW : 11** |
| **Name** | : | **திரு. கிருஷ்ணசாமி** |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.08.2026**

எதிரிகள் 2,3 ஆஜர். எதிரி–1 இறப்பு.

**முதல் விசாரணை :**

நான் பழங்காநத்தம், தண்டகாரன்பட்டி 3வது தெருவில் வசித்து வந்தேன். தற்போது மதுரை TVS நகரில் வசித்து வருகிறேன். பழ வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அதசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2021ம் வருடம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை, C2 காவல்நிலையத்தில் வைத்து போலிசார் கையெழுத்து போடும்படி கேட்டார்கள். அதனால் அந்த கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுகை அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையெழுத்து அதசாஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கையெழுத்தை எங்கு வைத்து போட்டுக் கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. என்னுடன் யாரும் இருந்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. என் முன்னிலையில் போலிசார் பொருள் எதையும் கைப்பற்றவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

14.07.2021ம் தேதி காலை 11.15 மணிக்கு என் முன்பும், இராமமூர்த்தி என்பவர் முன்பும் போலிசார் மதுரை முத்துப்பட்டி RMS காலனி, ஐந்துபனை கோவில், அழகுமலையான் நகர், பிளாட் எண்.47 வீட்டை பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. அன்று காலை 11.45 மணிக்கு மேற்படி வீட்டில் வைத்து, எரிந்த நைட்டியின் சாம்பல் சிறிதளவும், மண்ணெண்ணெயுடன் ஜனதா சர்பத் என எழுதப்பட்ட பிளாஸ்டிக் பாட்டில் ஒன்றும், VEL என எழுதப்பட்ட வேல் படம் போட்ட தீப்பெட்டி ஒன்றும் என் முன்னிலையிலும் சாட்சி இராமமூர்த்தி முன்னிலையிலும் போலிசாரால் கைப்பற்றப்பட்டது என்று காவல்துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. 1ம் எதிரி எனது நண்பர் என்றும் அதனால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN
Digitally signed by MUTHUKUMARAN
Date: 2026.08.29 16:09:08 +0530

அமர்வு நீதிபதி (மு.கூ.பொ),
மகளிர் நீதிமன்றம், மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 124 / 2023** |
| **Deposition of witness for** | **:** | **PW : 12** |
| **Name** | **:** | **திரு. இராமமூர்த்தி** |
| **Father's Husband's Name** | **:** | பாலு |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.08.2026**
எதிரிகள் 2,3 ஆஜர். எதிரி–1 இறப்பு.

**முதல் விசாரணை :**

நான் முத்துப்பட்டி, RMS காலனியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அதசாஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சுமார் 5 வருடத்திற்கு முன், தேதி, மாதம் ஞாபகம் இல்லை, முத்துப்பட்டி RMS காலனியில் வைத்து, என் வீட்டு அருகே தற்கொலை செய்து கொண்ட பெண்ணின் வீட்டை போலிசார் பார்வையிட்டார்கள். என் வீட்டில் வைத்து அந்த கையெழுத்து போட்டேன். (அந்த பெண்ணின் பெயர் சரியாக ஞாபகம் இல்லை). என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுகை அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையெழுத்து அதசாஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கையெழுத்தை என் வீட்டின் அருகே வைத்து போட்டுக் கொடுத்தேன். அப்போது மணி சரியாக ஞாபகம் இல்லை. அந்த சமயத்தில் போலிசார் பொருள் எதுவும் கைப்பற்றினார்களா என்று கவனிக்கவில்லை. என்னுடன் யாரும் இருந்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை.. போலிசார்

என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

14.07.2021ம் தேதி காலை 11.15 மணிக்கு என் முன்பும், சாட்சி கிருஷ்ணசாமி என்பவர் முன்பும் போலிசார் மதுரை முத்துப்பட்டி RMS காலனி, ஐந்துபனை கோவில், அழகுமலையான் நகர், பிளாட் எண்.47 வீட்டில் வைத்து, எரிந்த நைட்டியின் சாம்பல் சிறிதளவும், மண்ணெண்ணெயுடன் ஜனதா சர்பத் என எழுதப்பட்ட பிளாஸ்டிக் பாட்டில் ஒன்றும், VEL என எழுதப்பட்ட வேல் படம் போட்ட தீப்பெட்டி ஒன்றும் கைப்பற்றப்பட்டது என்று காவல்துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. 1ம் எதிரி எனது உறவினர் என்றும் அதனால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

போலிசார் என் வீட்டிற்கு வந்த போது நான் மட்டும் தான் வீட்டில் இருந்தேன். போலிசார் வந்தவுடன் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அது சம்பந்தமாக கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். நான் கையெழுத்து போட்டுக் கொடுத்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது. இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்த போது மேற்படி விபரத்தைச் சொன்னேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2026.08.29 16:18:43 +0530

அமர்வு நீதிபதி (மு.கூ.பொ),
மகளிர் நீதிமன்றம், மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 124 / 2023** |
| **Deposition of witness for** | : | **PW : 15** |
| **Name** | : | **திரு. முருகானந்தம்** |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.08.2026**

எதிரிகள் 2,3 ஆஜர். 1ம் எதிரி இறப்பு.

**முதல் விசாரணை :**

நான் வருவாய்துறையில் DROஆக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். 14.07.2021ம் தேதி நான் மதுரை கோட்டாட்சியராகப் பணியாற்றிய போது, சுப்பிரமணியபுரம் காவல் நிலைய குற்ற எண்.383/2021 வழக்கு சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை காலை சுமார் 10.30 மணிக்கு எனக்குக் கிடைக்கப் பெற்றது. நான் உடனடியாக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்குச் சென்று பிணவறைக்குச் சென்று, இறந்துபோன தேன்மொழி என்ற மகாலெட்சுமி என்பவர் பிரேதத்தைப் பார்வையிட்டேன். இறந்து போனவரின் உடலை அவரது பெற்றோர் எனக்கு அடையாளம் காட்டினார்கள். நான் பார்வையிட்ட போது, அவரது உடல் முழுவதும் தீக்காயம் காணப்பட்டது. இறந்துபோன பெண்ணின் பெற்றோரை நான் விசாரித்தேன். அவர்கள் ஏற்கனவே 13 பவுன் நகை, கட்டில், பீரோ மற்றும் சீர்வரிசைகள் கொடுத்ததாகவும் அது போதவில்லை என மேலும் பணம், நகை கேட்டு மகாலெட்சுமியின் கணவர் மற்றும் மாமனார், மாமியார் தொந்தரவு செய்ததாகவும் அந்த தொந்தரவு தாங்க

முடியாமல் 13.07.2021 அன்று இரவு சுமார் 09.15 மணியளவில், மகாலெட்சுமி தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டதகாவும், ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ற போது, மகாலெட்சுமி இறந்துவிட்டதாவும் சொன்னார்கள். பின்னர் பஞ்சாயத்தார்கள் கணேசன், மாயி, வைரவத்தேவர் மகன் முருகன், கழுவத்தேவர் மகன் மலைச்சாமி, துரைப்பாண்டி மகன் இளஞ்செழியன், குமார் மகன் காளிமுத்து ஆகியோர்களை விசாரித்தேன். அவர்கள், கணவன் மனைவிக்கு இடையே அடிக்கடி பிரச்சனை இருந்தது என்றும் அவர்களுக்குள் ஏற்பட்ட குடும்ப பிரச்சனை காரணமாக இறந்துவிட்டதாகவும் சொன்னார்கள். வரதட்சனை கொடுமை நிகழ்ந்ததா என தங்களுக்கு சரியாகத் தெரியவில்லை என்று சொன்னார்கள். எனது விசாரணையின் அடிப்படையில், மகாலெட்சுமி வரதட்சனை கொடுமை காரணமாக இறந்ததாக அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கையின் உண்மை நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். **அது அதசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் ஆவணம் ஆணையர் அலுவகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக சாட்சி கூறுகிறார்.) (அசல் ஆவணத்தையும் பஞ்சாயத்தார்கள் வாக்குமூலம் மற்றும் பிரேத விசாரணை சம்பந்தமான முழு கோப்பையும் தாக்கல் செய்ய அரசு தரப்பிற்கு உத்தரவிடப்படுகிறது). 09.07.2022 அன்று இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (2,3 எதிரிகள் தரப்பில்) :</u>

நான் எத்தனை மணிக்கு அரசு மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன் என்று கேட்டால் காலை சுமார் 11.00 மணிக்கு சென்று பார்த்தேன். நான் பிணவறையில் சுமார் ½ மணி நேரம் இருந்தேன். அங்கு இறந்துபோனவரின் பெற்றோர்கள் இருந்தார்கள். பிரேத விசாரணை அறிக்கை அதசாஆ.6ல் எந்த தேதி, எத்தனை மணிக்கு, எவ்வளவு நகை வரதட்சனையாகக் கேட்டார்கள்

என்ற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று கேட்டால் குறிப்பிடப்படவில்லை. இறந்துபோன நபருடைய தாயார் இறந்து போன அன்று, பார்வதி என்ற நபருக்கும் தன் மகளுக்கும் சண்டை நடந்ததாகச் சொல்லியுள்ளார் என்றால் சொல்லியுள்ளார். சாட்சி பின்னிட்டு அவ்வாறு இறந்துபோனவரின் கணவர் ராஜா தன்னிடம் சொன்னதாகக் கூறுகிறார். மாமியாரும் மாமனாரும் பார்வதியை தவறாகப் பேசியதாக மகாலெட்சுமி பார்வதியிடம் சொன்னதாகவும், அது பற்றி பார்வதி ராஜாவிடம் கைபேசியில் அழைத்து, ஏன் தரக்குறைவாகப் பேசினீர்கள் என்று கேட்டதாகவும் பார்வதியின் வீட்டிற்கு தன் மனைவியை ராஜா அழைத்துச் சென்றதாகவும் அப்போது தன் மனைவி தெரியாமல் கூறிவிட்டேன் என கூறியதாகவும் ராஜா என்னிடம் வாக்குமூலம் கொடுத்ததாக அதசாஆ.6 அறிக்கையில் கூறியுள்ளேன் என்று சொன்னால் அவ்வாறு கூறியுள்ளேன். உண்மையில் வரதட்சனை எதுவும் கேட்கவில்லை என்றும் பார்வதியிடம் தவறாக சொல்லிவிட்டதால் மனம் உடைந்து மகாலெட்சுமி இறந்துள்ளார் என்றும் சொன்னால் அது சரியல்ல. அதசாஆ.6 அறிக்கையில் திருமணம் தொடர்பாக வரதட்சனை கேட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்று கேட்டால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. வரதட்சனை காரணமாக மகாலெட்சுமி இறந்துவிட்டதாக எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சங்கதி தவறானது என்று சொன்னால் அது சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN

Digitally signed by MUTHUKUMARAN
Date: 2026.08.29 16:19:01 +0530

அமர்வு நீதிபதி (மு.கூ.பொ),
மகளிர் நீதிமன்றம், மதுரை